**கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்.**
**முன்னிலை .. திரு கே. அய்யப்பன்பிள்ளை. பி.எஸ்ஸி., பி.எல்.**
**கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர்.**
**கும்பகோணம்.(மு.கூ.பொ.)**
**2019ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22-ஆம் நாள், வெள்ளிக்கிழமை.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் 01/2017**

அரசு. காவல்துறை ஆய்வாளர்,
கூத்தாநல்லூர் காவல் நிலையம்,
குற்ற எண். 22/2002 .. குற்றமுறையிடுபவர்.

/எதிராக/

செந்தில் த/பெ. நடேசன் .. எதிரி

(பிரதம ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 04/2010-ன் மொத்தமுள்ள நான்கு எதிரிகளில் 1ம் எதிரியான இந்த வழக்கின் எதிரி செந்தில் த/பெ. நடேசன் என்பவரை பொறுத்து மேற்படி பிரதம வழக்கில் கடந்த 09.01.2017 தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பிரதம வழக்கு பிரிக்கப்பட்டு, இந்த எதிரி செந்தில் என்பவரை பொறுத்து ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.01/2017 ஆக தனியாக கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது.)

------

இவ்வழக்கு இறுதியாக 18.02.2019 அன்று என் முன்பாக விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. டி. சுந்தரவடிவேலு அவர்கள், முன்னிலையான நிலையில், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கின் ஆவணங்கள் பரிசீலனைச் செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்காலாகும்..

**தீர்ப்புரை.**

31.01.2002ம் தேதி நள்ளிரவுக்கு மேல், இவ்வழக்கின் எதிரி செந்தில் என்பவரும் பிரதம ஆண்டு பட்டிகை வழக்கின் எதிரிகளான கார்த்தி (எ) கார்த்திகேயன், துரைராஜ், கண்ணன் ஆகிய நால்வரும் சேர்ந்து கூத்தாநல்லூர் காவல் நிலைய சரகம் விழல்கோட்டகம் அ/மி. ஸ்ரீ மகா குளந்தாயி அம்மன் கோவிலில் இருந்த சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள உலோகத்தாலான அம்மன் சிலையை திருட வேண்டுமென்ற நோக்கத்தில் மேற்படி அம்மன் சிலை இருந்த கீற்றுக் கொட்டகைக் கூறையை பிரித்து உள்ளே இறங்கி சிலையை திருடி சென்றதாக இந்த வழக்கின் எதிரி செந்தில் மற்றும் பிரதம ஆண்டு பட்டிகை வழக்கு எண்.04/2010ன் எதிரிகள் ஆகிய கார்த்தி (எ) கார்த்திகேயன், துரைராஜ், கண்ணன் ஆகிய நால்வர் மீது இ.த.ச. பிரிவுகள் 457 (2) & 380 (2) ன்படி கூத்தாநல்லூர் காவல்நிலைய ஆய்வாளர் குற்ற அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்.

2. பிரதம ஆண்டுப்பட்டிகை வழக்கானது விசாரணை நிலுவையில் இருந்த நிலையில், இவ்வழக்கின் எதிரி செந்தில் என்பவர் நீண்டகாலமாக ஆஜராகாமல் இருந்து வந்த காரணத்தினாலும், அவர் மீது பிறப்பிக்கப்பட்ட பிடிகட்டளை நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வந்த காரணத்தினாலும், பிரதம ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 04/2010ஆனது 09.01.2017 அன்று பிரிக்கப்பட்டு இந்த எதிரி செந்தில் என்பவரை பொறுத்து ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.01/2017 ஆக தனியாக கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கானது 09.01.2017 அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச.பிரிவு 207-ன் கீழ் வழங்கப்பட்டு, இருதரப்பும் வினவப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய அடிப்படை ஆதாரங்கள் இருப்பதாகக் கருதியும், எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 457 (2) மற்றும் 380 (2) ன்படி குற்றச்சாட்டுகள் வனைந்து ,தமிழில் படித்துக் காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்தார். எனவே, அரசுத் தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரணைச் செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களும், சா.பொ.1 மட்டும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. **அரசுத் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து தெரிய வரும் அரசு வழக்கின் சுருக்கம்.**

அ.சா.1 செல்வம், அ.சா.2 மகாலிங்கம் ஆகியோர் விழல்கோட்டகம் ஸ்ரீ மகா குளந்தாயி அம்மன் கோவில் பூசாரியாக வேலை செய்கிறார்கள். அந்த கோவிலை புதுப்பித்து கட்டுவதற்காக கோவிலில் இருந்த கல்சிலை மற்றும் உலோக அம்மன் சிலைகளை தனியாக மூங்கில் தட்டி அமைத்து கூரை கொட்டகையில் வைத்து அதில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பூஜை செய்து வந்தார்கள். இந்நிலையில் கடந்த 29.02.2002 அன்று பூஜை செய்வதற்காக கோவிலுக்கு வந்தபோது கோவில் வாசலில் லாரி மோதியிருந்தது. அதனால் பூஜை செய்யாமல் வீட்டிற்கு போய்விட்டனர். அதன் பிறகு 01.02.2002 அன்று காலை 10.00 மணிக்கு பூஜை செய்வதற்கு வந்த போது கோவிலை திறந்து பார்த்த போது உலோகத்தாலான அம்மன் சிலையை காணவில்லை. அந்த கீற்றுக் கொட்டகையின் மேல்பக்கம் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த சிலை காணாமல் போய்விட்டது குறித்து கோவில் நிர்வாகி சேகர் என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதே ஊரை சேர்ந்த அ.சா.3 நடராஜன், தங்கவேல் மற்றும்

ஊர் மக்களும் தேடிப் பார்த்தனர். சிலை கிடைக்காததால் கோவில் நிர்வாகி சேகர் கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகார் அ.சா.ஆ.3. அப்போது கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக இருந்த சமரசம் என்பவர் மேற்படி சேகர் கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.22/2002 இதச சட்டப்பிரிவுகள் 457 மற்றும் 380 ன்கீழ் வழக்கு பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9. பின்னர் இவ்வழக்கை அ.சா.4 காவல் ஆய்வாளர் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று மாலை 04.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரில் அ.சா.2 பக்கிரிசாமி கையெழுத்திட்டதாக கூறியுள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ.2. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.1. சாட்சிகள் செல்வம், சேகர், மகாலிங்கம், தங்கவேல், வெள்ளிநாதன், துரை, மெய்யப்பன், ஜெயபால், கார்த்திகேயன், மாரியப்பன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். திருடுபோன சிலை கிடைத்து விட்டதாக மன்னார்குடி காவல் நிலையத்திலிருந்து தகவல் வந்தது. அந்த சிலை துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு இருந்தது. குற்றப் பிரிவு உதவி ஆய்வாளர் கண்ணன் என்பவர் எதிரிகள் செந்தில், கண்ணன், துரைராஜ் ஆகியோரை கைது செய்து எதிரி செந்தில் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் கஜேந்திரன் மற்றும் பாண்டியன் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்கமூலத்தின் பேரில் எதிரி செந்தில் அவரது வீட்டின் கொல்லைபுறத்தில் துண்டுகளாக வெட்டி மறைத்து வைத்திருந்த குளந்தாயி அம்மன் சிலையை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7. பின்னர் எதிரிகள் மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். கைப்பற்றப்பட்ட தடய பொருளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அந்த படிவம் அ.சா.ஆ.8. அந்த சாமி சிலையின் உலோக துண்டுகள் பஞ்சலோகத்தாலானது என்று ஸ்தபதி ராமசாமி சான்று வழங்கி உள்ளார். பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 457 (2) மற்றும் 380 (2) ன்கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. மேற்சொன்ன சாட்சிகளின் சாட்சியத்தில், எதிரிக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313 (1) (ஆ)ன் கீழ் வினவியபோது, சாட்சிகள் பொய் சாட்சியம் கூறுவதாகவும், தன் தரப்பில் சாடசிகள் உண்டு என்றும் தெரிவித்தனர். ஆனால் எதிரி தரப்பில் எந்த ஒரு சாட்சியும் விசாரணை செய்யப்படவில்லை.

7) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

8) 31.01.2002ம் தேதி நள்ளிரவுக்கு மேல், இவ்வழக்கின் எதிரி செந்தில் மற்றும் பிரதம ஆண்டு பட்டிகை வழக்கு எண்.04/2010ன் எதிரிகளான கார்த்தி (எ) கார்த்திகேயன், துரைராஜ், கண்ணன் ஆகிய நால்வரும் சேர்ந்து கூத்தாநல்லூர் காவல் நிலைய சரகம் விழல்கோட்டகம் அ/மி. ஸ்ரீ மகா குளந்தாயி அம்மன் கோவிலில் இருந்த சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள உலோகத்தாலான அம்மன் சிலையை திருட வேண்டுமென்ற நோக்கத்தில் மேற்படி அம்மன் சிலை இருந்த கீற்றுக் கொட்டகைக் கூரையை பிரித்து உள்ளே இறங்கி சிலையை திருடி சென்றதாக இந்த வழக்கு எதிரிகள் மீது 457 (2) மற்றும் 380 (2) இதசபடி அரசு தரப்பு இறுதி அறிக்கைத் தாக்கல் செய்துள்ளது.

9). தற்பொழுது இவ்வழக்கில் தீர்வுக்கான பிரச்சனை யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள் 457 (2) & 380(2)ன்படியான குற்றங்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10). <u>தீர்வு</u>

அரசு தரப்பில் கடந்த 31.01.2002 அன்று கூத்தாநல்லூர் காவல் சரகத்திற்குட்பட்ட விழல்கோட்டகம் அ/மி. மகா குளந்தாயி அம்மன் கோவிலில் இந்த வழக்கின் எதிரி செந்தில் மற்றும் பிரதம ஆண்டு பட்டிகை வழக்கு எண். 04/2010 வழக்கின் இதர மூன்று எதிரிகள் ஆகிய நால்வரும் அம்மன் சிலை இருந்த கீற்றுக் கொ்டடகையை பிரித்து உள்ளே இறங்கி சுமார் ஐந்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள உலோகத்தாலான குளந்தாயி அம்மன் சிலையை திருடி சென்று விட்டதாக எதிரி மீது குற்றச்சாட்டு சொல்லப்பட்டுள்ளது.

11) அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், கடந்த 31.01.2002 அன்று இரவு விழல்கோட்டகம் அ/மி. மகா குளந்தாயி அம்மன் கோவிலில் இருந்து சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள குளந்தாயி அம்மன் சிலையை இவ்வழக்கின் எதிரி செந்திலும் பிரதம ஆண்டு பட்டிகை வழக்கு எண். 04/2010 வழக்கின் மூன்று எதிரிகளும் சேர்ந்து சிலை வைக்கப்பட்டிருந்த கீற்று கொட்டகை கூரையை பிரித்து திருடி சென்று விட்டார்கள் என்றும் அது சம்மந்தமாக கோவில் பூசாரியான அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 மகாலிங்கம் ஆகியோர் பார்த்து கோவில் நிர்வாகியான அ.சா.7 சேகர் என்பவரிடம் தகவல் சொல்லி அவர் கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும் மேற்படி சிலை திருடு போனதாக அ.சா.2, 5, 6 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அந்த புகாரின் பேரில் குற்றப் பிரிவு உதவி ஆய்வாளர் கண்ணன் என்பவர் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்து எதிரி செந்தில் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் மேற்படி எதிரியின் வீட்டின் கொல்லை புறத்தில் இருந்த அறுக்கப்பட்ட

நிலையில் இருந்த அம்மன் சிலையை கைப்பற்றியுள்ளார் என்றும் மேற்படி கோவிலில் இருந்து திருடியதாக எதிரி செந்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் தான் சிலையின் அறுக்கப்பட்ட துண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அதன் பின்னர் கூத்தாநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் அன்பழகன் புலன் விசாரணை செய்து எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார் என்றும் எனவே எதிரிகள் கோவிலில் இருந்து சிலையை திருடியதாக அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதுரைத்தார்.

12. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் விழல்கோட்டகம் அ/மி. குளந்தாயி அம்மன் கோவில் பூசாரியாக உள்ள அ.சா.2 மகாலிங்கம் தன் சாட்சியத்தில் 04.02.2002ந் தேதி கோவிலில் பூஜை செய்வதற்காக கோவிலிக்கு வந்த போது கோவிலில் இருந்த ஐம்பொன்னாலான அம்மன் சிலையை காணவில்லை என்று கூறியுள்ளார் என்றும் மேலும் அந்த அம்மன் சிலையின் இடது மேல் கையில் பாம்பும், கீழ் கையில் பூச்செண்டும் வலது புறத்தில் மேல் கையில் சாட்டையும் கீழ் கையில் கபாலமும் இருக்கும் என்று சொல்லி உள்ளார் என்றும் ஆனால் அந்த சிலை பற்றிய விவரத்தை போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றும் வழக்கில் உள்ள முதல் தகவல் அறிக்கையானது 04.01.2002 தேதியிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால் 04.02.2002 அன்று சிலையை காணவில்லை என்று அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் முதல் தகவல் அறிக்கையில் 29.01.2002 காலையிலிருந்து 01.02.2002 காலை 10.00 மணிக்கு இடையில் சிலை காணாமல் போனதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் அந்த கோவிலில் இருந்த சிலை காணாமல் போனதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியங்கள் கூறப்பட்டுள்ளது என்றும் காணாமல் போன சிலை பற்றிய விவரங்களும் முன்னுக்கு பின் முரணாக கூறப்பட்டள்ளது என்றும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக கூறும் கூத்தாநல்லூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சமரசம் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும் அவ்வாறு விசாரிக்காததற்கு என்ன காரணம் என்று கூறவில்லை என்றும் கோவிலில் திருடு போன சிலை எந்த உலோகத்தாலானது என்று தெரியாது என்று சாட்சிகள் கூறியுள்ளனர் என்றும் கோவிலில் இருந்த சிலை பற்றி அ.சா.2, அ.சா.7 ஆகியோரின் சாட்சியங்களுக்கிடையே பெருத்த முரண்பாடுகள் காணப்படுகிறது என்றும் அ.சா.1, அ.சா.2 ஆகியோரை இரண்டு முறை போலீசார் விசாரித்ததாக கூறியுள்ளனர் என்றும் ஆனால் அவ்வாறு இரண்டு முறை விசாரித்ததாக வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும் எனவே அரசு தரப்பில் கூறுவது போல் விழல்கோட்டகம் குளந்தாயி அம்மன் கோவிலில் இருந்து சிலை திருடு போகவில்லை என்றும் வாதுரைத்தார்.

13. விழல்கோட்டகம் கிராமத்தில் ஸ்ரீ மகா குளந்தாயி அம்மன் கோவிலில் இருந்த சிலை காணாமல் போனதாக 01.02.2002 அன்று காலை கோவிலில் பூஜை செய்வதற்காக வந்த போது தெரிய வந்தது என்றும் அது சம்மந்தமாக 04.02.2002ம் தேதி புகார் கொடுத்ததாகவும் முதல் தகவல் அறிக்கையிலிருந்து தெரிகிறது. அ.சா.7 சேகர் என்பவர் 04.02.2002ம் தேதி புகார் கொடுத்ததாக கூறியுள்ளார். மேலும் கோவில் சிலை காணாமல் போனதாக அ.சா. 3, 5, 6 ஆகியோர்களும் சாட்சியம் அளித்துள்ளனர். முதல் தகவல் அறிக்கையின் முதல் பக்கத்தில் 04.02.2002 என்று தேதி போடுவதற்கு பதிலாக 04.01.2002 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிகிறது. ஆனால் அந்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை சரத்துகளை பார்க்கும் போது 04.02.2002ல் தான் புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பது தெரிகிறது. மேலும் அந்த கோவிலில் உள்ள சிலை காணாமல் போனதாக அந்த ஊரில் உள்ள நபர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டள்ளனர். எனவே மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து விழல்கோட்டகம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ மகா குளந்தாயி அம்மன் கோவில் சிலை திருடு போயிருக்கிறது என்பது தெரிகிறது. முதல் தகவல் அறிக்கையின் முதல் பக்கத்தில் தேதி தவறுதலாக போட்டிருப்பதாலோ அம்மன் சிலையின் அமைப்பை அ.சா.2 போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்பதாலோ அந்த கோவில் சிலை காணாமல் போனதாக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்ற எதிரிகள் தரப்பு வாதம் ஏற்க கூடியதாக இல்லை என்றே கருத முடிகிறது.

14. மேலும் எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த சமரசம் என்ற உதவி ஆய்வாளரை இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றும் அதனால் அந்த முதல் தகவல் அறிக்கையின் உண்மை தன்மை நிரூபிக்கப்படவில்லை என்றும் வாதுரைத்தார். இவ்வழக்கானது 2002ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வழக்கை காவல் ஆய்வாளர் அய்யனார் என்பவர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாக கூறப்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் அய்யனார் இந்த வழக்கில் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் கோவில் சிலை திருடு போனதாக அந்த கோவில் நிர்வாகி சேகர் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசாரிக்கவில்லை என்பதால் முதல் தகவல் அறிக்கையின் உண்மை தன்மை நிரூபிக்கப்படவில்லை என்று எதிரி தரப்பில் கூறும் வாதம் ஏற்க கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. இவ்வழக்கில் **வி**ழல்கோட்டகம், அ/மி. மகா குளந்தாயி அம்மன் கோவிலில் உள்ள சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள குளந்தாயி அம்மன் உலோக சிலை திருடுபோனதாக அ.சா.7 சேகர் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் கூத்தாநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.22/2002 என்ற வழக்கு

பதிவு செய்யப்பட்டுள்ளது. சிலை காணாமல் போனதாக அந்த கோவிலின் பூசாரி அ.சா.1 செல்வம், அ.சா.2 மகாலிங்கம் மற்றும் அதே ஊரை சேர்ந்த அ.சா.3 நடராஜன், அ.சா.5 தங்கவேல் ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர் என்பது தெரிகிறது. அ.சா.7 சேகர் கொடுத்த புகார் பேரில் அ.சா.9 காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து சாட்சிகளை விசாரித்ததாக கூறியுள்ளார். மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து கூத்தாநல்லூர் காவல் சரகத்திற்குட்பட்ட விழல்கோட்டகம் கிராமத்தில் உள்ள அ/மி. குளந்தாயி அம்மன் கோவிலில் இருந்து சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள குளந்தாயி அம்மன் உலோக சிலை திருடு போயிருக்கிறது என்பது தெரிகிறது.

16. மேற்படி விழல்கோட்டகம், அ/மி. மகா குளந்தாயி அம்மன் கோவிலில் இருந்த குளந்தாயி அம்மன் உலோக சிலை திருடு போனதாக கூறியுள்ள நிலையில் இந்த எதிரிகள் தான் அதை திருடி சென்றிருக்கிறார்களா என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாக உள்ளது.

17. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் இவ்வழக்கின் எதிரி செந்தில் மற்றும் பிரதம வழக்கின் எதிரிகளான கண்ணன், துரைராஜ் ஆகியோரை உதவி ஆய்வாளர் கண்ணன் என்பவர் கைது செய்ததாகவும் இந்த வழக்கின் எதிரி செந்தில் என்பவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி செந்தில் என்பவரின் வீட்டின் கொல்லைபுறம் இருந்த சிறுசிறு துண்டுகளாக வெட்டப்பட்ட சிலை கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் ஆனால் எதிரி செந்தில் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தை கஜேந்திரன் மற்றும் பாண்டியன் ஆகிய சாட்சிகள் கையெழுத்திட்டதாக கூறப்பட்டுள்ளது என்றும் அவர்களில் பாண்டியன் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும் ஆனால் அவர் தன் சாட்சியத்தில் எதிரி செந்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவோ எதிரியிடமிருந்து சிலை எதுவும் கைப்பற்றப்பட்டதாகவோ எதுவும் கூறவில்லை என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாக கூறும் உதவி ஆய்வாளரே இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்யும் போதே காவல் நிலைய குற்ற எண். பதிவு செய்யப்பட்டு கைப்பற்றப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றும் எதிரியை கைது செய்யும் போது குற்ற எண்ணை பதிவு செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றும் எதிரிக்கு வழக்கின் குற்ற எண் எதுவும் தெரியாது என்றும் இவ்வழக்கில் வேண்டுமென்றே எதிரிகள் மீது குற்றம் சுமத்துவதற்காக காவல் நிலைய குற்ற எண் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பில் கூறுவது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரி

வீட்டு கொல்லையிலிருந்து சிலையின் அறுக்கப்பட்ட துண்டுகள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு எதிரி வீட்டின் கொல்லையிலிருந்து சிலை துண்டுகள் கைப்பற்றப்பட்டதாகவோ அதை பார்த்ததாகவோ சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் எனவே இவ்வழக்கின் எதிரிகள் தான் சிலையை திருடியதாக அரசு தரப்பில் எல்லா சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் வாதுரைத்தார்.

18. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், மன்னார்குடி காவல் நிலைய குற்றப் பிரிவை சேர்ந்த உதவி ஆய்வாளர் கண்ணன் என்பவர் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்துள்ளார் என்றும் குற்றப்பிரிவு சம்மந்தமான இவ்வழக்கு மற்றும் சில வழக்குகளில் இந்த எதிரிகள் சம்மந்தப்பட்டு இருப்பதாக எதிரி செந்தில் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும் அதனால் தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற எண் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த உதவி ஆய்வாளர் இறந்து விட்டார் என்றும் அதனால் அவரை சாட்சியாக விசாரிக்க இயலவில்லை என்றும் எதிரி செந்தில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி வீட்டின் கொல்லைபுறத்திலிருந்து சிறுசிறு துண்டுகளாக வெட்டப்பட்ட நிலையில் குளந்தாயி அம்மன் சிலை மகஜரில் கைப்பற்றினார் என்றும் அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையெழுத்திட்ட சாட்சி கஜேந்திரன் என்பவர் இறந்துவிட்டார் என்றும் மற்றொரு சாட்சியான பாண்டின் என்பவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் இதுபோன்ற வழக்குகளில் தடயங்கள் எவ்வாறு கைப்பற்றப்பட்டன என்பதை தான் பார்க்க வேண்டும் என்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சி பிறழ் சாட்சியாகிவிட்டார் என்பதற்காக எதிரிகள் இந்த குற்ற செயலை செய்யவில்லை என்று எதிரி தரப்பில் கூறும் வாதம் ஏற்க கூடியதாக இல்லை என்று வாதுரைத்தார்.

19. இவ்வழக்கில் உள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆக குறியிடப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பமிட்டதாக கூறும் அ.சா.8 பாண்டியன் தன் சாட்சியத்தில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு மன்னார்குடி காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கையொப்பம் வாங்கியதாகவும் சம்பவம் பற்றி தனக்கு தெரியாது என்றும் கூறியுள்ளார். இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27ன்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி தடயங்கள் கைப்பற்றப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றும் ஆனால் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த உதவி ஆய்வாளரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்காத நிலையிலும் ஒப்புதல் வாக்குமூல சாட்சி பிறழ் சாட்சியாகிவிட்ட நிலையிலும் அரசு தரப்பில் கூறுவது போல் எதிரி செந்தில் என்பவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருக்குமா என்பது சந்தேகத்திற்கிடமாக உள்ளது. கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையெழுத்திட்ட அ.சா.8 பாண்டியன் பிறழ் சாட்சியாகிவிட்ட நிலையில்

தடய பொருள்கள் அரசு தரப்பில் கூறுவது போல் கைப்பற்றப்பட்டிருக்குமா என்பது சந்தேகத்திற்கிடமாக உள்ளது. மேலும் தடயப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்ற காரணத்தினால் மட்டும் நம்ப தகுந்த சாட்சியங்கள் இல்லாத நிலையில் எதிரிகள் தான் இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கருத முடியாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கின் புலன் விசாரணையில் நம்ப தகுந்த சாட்சியங்கள் இல்லாத நிலையில் அரசு தரப்பில் கூறுவது போல் எதிரி செந்தில் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தடயப் பொருட்கள் கைப்பற்றப்பட்டிருக்குமா என்பது சந்தேகத்திற்கிடமாக உள்ளது. எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் கூறுவது போல் எதிரிகளை கைது செய்ததாகவோ எதிரி செந்தில் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாகவோ அதன் அடிப்படையில் இவ்வழக்கின் தடய பொருள்களை கைப்பற்றியதாகவோ கூறுவதும் சந்தேகத்திற்கிடமாக உள்ளது. எனவே அரசு தரப்பில் எல்லா சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிரிகள் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு எல்லா சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாத நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணையானது எல்லா சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி விழல்கோட்டகம் ஸ்ரீ மகா குளந்தாயி அம்மன் கோவிலில் இருந்த உலோகத்தாலான அம்மன் சிலையை திருட சதித்திட்டம் தீட்டி அச்சிலையை மேற்படி கோவிலில் இருந்து திருடியதாக கூறும் குற்றச்சாட்டுகள் எல்லா நியாயமான சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து இந்த தீர்விற்கு விடை காணப்படுகிறது.

20. முடிவாக, மேலே சொன்ன காரணங்களின் அடிப்படையில் எதிரி மீது சுமத்தப்பட்ட 457 (2) மற்றும் 380(2) இதச பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248 (1)ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21. இந்த வழக்கு மற்றும் பிரதம ஆண்டு பட்டிகை வழக்கு எண்.04./2010 வழக்கின் வழக்கு சொத்தான சிறுசிறு துண்டுகளாக உள்ள உலோக அம்மன் சிலை துண்டுகளை மேற்படி இரு வழக்குகளின் மேல்முறையீட்டு காலம் முடிந்த பின்னர் வாதி கோவிலான, விழல்கோட்டகம் ஸ்ரீ மகா குளந்தாயி அம்மன் கோவிலின் நிர்வாகி பெற்றுச் செல்ல உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2019ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22ஆம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

(ஒப்பம்.)
கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர்,
கும்பகோணம்.(மு.கூ.பொ.)

**அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்.**

| | |
|---|---|
| அ.சா. 1 | திரு. செல்வம் |
| அ.சா. 2 | திரு. மகாலிங்கம் |
| அ.சா. 3 | திரு. நடராஜன் |
| அ.சா. 4 | திரு. அய்யனார் |
| அ.சா. 5 | திரு. தங்கவேல் |
| அ.சா. 6 | திரு. பக்கிரிசாமி |
| அ.சா. 7 | திரு. சேகர் |
| அ.சா. 8 | திரு. பாண்டியன் |
| அ.சா. 9 | திரு. அன்பழகன். |

**அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்.**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 04.02.2002 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ. 2 | 04.02.2002 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.6ன் கையொப்பம். |
| அ.சா.ஆ. 3 | 04.02.2002 | அ.சா.7 சேகர் கொடுத்த புகார் மனு |
| அ.சா.ஆ. 4 | 09.05.2003 | எதிரி செந்தில் எழுதி கொடுத்ததாக கூறும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.8ன் கையொப்பம். |
| அ.சா.ஆ. 5 | 09.05.2003 | கைப்பற்றுகை மகஜரில் உள்ள அ.சா.8ன் கையொப்பம். |
| அ.சா.ஆ. 6 | 09.05.2003 | எதிரி செந்தில் எழுதி கொடுத்ததாக கூறும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.சா.ஆ. 7 | 09.05.2003 | கைப்பற்றுகை மகஜர் |
| அ.சா.ஆ. 8 | 24.06.2003 | படிவம் 95 |
| அ.சா.ஆ. 9 | 04.01.2002 | முதல் தகவல் அறிக்கை |

**அரசுத் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றுப் பொருட்கள்.**

சா.பொ. 1 சிறுசிறு துண்டுகளாக உள்ள உலோக அம்மன் சிலை.

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்.**

.. இல்லை .

(ஒப்பம்.)
கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர்,
கும்பகோணம்.(மு.கூ.பொ.)

/உண்மை நகல்/

கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர்,
கும்பகோணம்.(மு.கூ.பொ.)

C.C. No. 01/2017
Draft /Fair Order
Dated: 22.02.2019.
Addl. Chief Judicial Magistrate
Court, Kumbakonam.